இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 26.03.2026

# கொரோனா காலத்தைப் போலவா..?

“கொரோனா காலத்தில் உங்களைக் காத்ததைப் போல இந்தப் போர்க் காலத்திலும் மக்களைக் காப்பேன்” என்று சொல்லி இருக்கிறார் பிரதமர் மோடி. இவர் சும்மா இருந்தாலே மக்கள் தங்களைத் தாங்களே காத்துக் கொள்வார்கள். கொரோனா காலம் என்று சொல்லி மக்களை பீதியடைய வைக்க வேண்டாம்.

**கொரோனா காலத்தில் இந்திய நாட்டு மக்களை நான் எப்படிக் காத்தேன் என்பதை பிரதமர் மோடி சொன்னாரா என்றால் இல்லை. சொல்ல முடியுமா என்றால் முடியாது! கொரோனாவை விடக் கொடூரமான ஆட்சியை அல்லவா பிரதமர் மோடி நடத்தினார்.**

2019 டிசம்பரில் கொரோனாவின் பாதிப்பு உலக நாடுகளில் பரவியது. பல நாடுகள் ஊரடங்கு அறிவித்து விட்டன. வெளிநாட்டவர் வருகையை தடுத்துவிட்டார்கள். 2020 ஜனவரி 29ம் தேதி நிருபர்களைச் சந்தித்த ஒன்றிய சுகாதார அமைச்சர் ஹர்ஷ் வர்தன், “இந்தியாவில் கொரோனா வைரஸ் பாதிப்பு யாருக்கும் இல்லை, மக்கள் அச்சம் அடைய வேண்டாம். 2014 இல் எபோலோ வைரஸை இந்தியாவுக்குள் வராமல் தடுத்தோம். அதைப் போல கொரோனாவையும் வரவிடாமல் தடுத்துவிடுவோம்” என்று சொன்னார். “கொரோனா பாதிப்பில் இருந்து மீள்வதற்கு சீனாவுக்கு உதவ இந்தியா தயாராக உள்ளது. உயிரிழப்புகள் துரதிருஷ்டவசமானவை. உங்களுக்கு இந்தியா துணை நிற்கும்” என்று சீனாவுக்கு கடிதம் எழுதிக் கொண்டு இருந்தார் பிரதமர் மோடி. உலகம் முழுக்க 2000 பேர் இறந்து விட்டதாக புள்ளிவிவரம் சொல்லிக் கொண்டு இருந்தபோதுதான் இந்தியாவுக்குள் வருகிறார் அமெரிக்க அதிபர் டிரம்ப். குஜராத் மைதானத்தில் பல்லாயிரக்கணக்கானவர்களைத் திரட்டி வைத்துக் கொண்டு அமெரிக்க அதிபரோடு நின்றார் பிரதமர்.

**அதற்குள் கொரோனா வைரஸ் இந்தியாவுக்குள் பரவிவிட்டது. மார்ச் 15 ஆம் தேதி இந்தியாவில் பாதிக்கப்பட்டவர் எண்ணிக்கை 84 ஆகி, இரண்டு பேர் பலியானார்கள் என்பதற்குப் பிறகு தேசியப் பேரிடர் என்று மத்திய அரசாங்கம் அறிவித்தது. மூன்று மாதங்கள் கழித்து 2020 மார்ச் 25 ஆம் தேதிதான் ஊரடங்கு அறிவித்தது. 100 நாட்கள் கழித்துதான் இவர்கள் கொரோனாவின் தாக்கத்தையே உணர்ந்தார்கள். ‘நாட்டு மக்களிடம் ஊரடங்கு அறிவிப்புக்காக மன்னிப்புக் கேட்கிறேன்’ என்று பிரதமர் அறிவித்தார்.**

2020 ஜனவரி முதல் வாரத்தில் செய்திருக்க வேண்டியதை மார்ச் கடைசி வாரத்தில் செய்ததன் விளைவுதான் கொரோனா பலிகள், பாதிப்புகள், துன்பங்கள், துயரங்கள்.

**மருத்துவமனையில் படுக்கைகள் இல்லை, ஆக்சிஜன் சிலிண்டர்கள் இல்லை, வெண்டிலேட்டர்கள் இல்லை, தடுப்பூசிகள் இல்லை என்ற நிலைமையில்தான் நாட்டை வைத்திருந்தார் மோடி. ஒரு சில குறிப்பிட்ட நிறுவனங்களின் ஆதிக்கத்தில் தடுப்பூசியை தக்க வைக்க ஒன்றிய அரசு அனுமதி அளித்ததன் விளைவே தடுப்பூசித் தட்டுப்பாடு. தடுப்பூசித் தட்டுப்பாட்டை செயற்கையாக உருவாக்கினார்கள்.**

**கோடிக்கணக்கானவர்கள் வேலை இழந்தார்கள். அவர்களுக்கு எந்த இழப்பீடும் வழங்கவில்லை பிரதமர் மோடி.**

ஊரடங்கு போட்டுவிட்டால் போதும் என்று நினைத்தார் பிரதமர். ஒரு மாநிலத்தை விட்டு இன்னொரு மாநிலம் போய் வாழ்பவர்கள், தங்கள் மாநிலத்துக்குச் செல்ல எந்த வாய்ப்பும் ஏற்படுத்தித் தரவில்லை பிரதமர் மோடி. ஊரடங்கு போட்ட பிரதமர் மோடி, அந்த மக்களுக்கு வாகனப் போக்குவரத்து கூட ஏற்பாடு செய்யவில்லை. பல நூறு கிலோ மீட்டர் தூரம் தலையில் பொருட்களையும், இடுப்பில் குழந்தைகளையும் வைத்துக் கொண்டு லட்சக்கணக்கான வட மாநிலத் தொழிலாளர்கள் நடந்தே தங்கள் ஊருக்குப் போனார்கள். அவுரங்காபாத் ரயில் பாதையில் நடந்து சென்றவர்கள் (8.5.2020) களைப்பால் அதிலேயே படுத்து தூங்க - ரயில் ஏறி 16 பேர் பரிதாபமாக செத்தார்கள். இதை விடக் கொடூரமான சம்பவம் வேண்டுமா?

பொதுமுடக்கக் காலத்தில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒன்றிய அரசு கொடுத்த நிதி உதவி என்ன? உணவு உதவி என்ன? உயிர் உதவி என்ன? ஏதுமில்லை.

**யோகி ஆதித்யநாத் ஆளும் உத்தரப்பிரதேச அரசில் மக்களுக்கு ஆக்சிஜன் கிடைக்கவில்லை. இது குறித்து அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் ஒருவர் பொதுநல வழக்குத் தாக்கல் செய்தார். அந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள், ‘சுதந்திரம் அடைந்து 70 ஆண்டுகள் ஆகியும் மக்களுக்கு ஆக்சிஜன் வழங்க முடியாதது வெட்கக்கேடானது. அரசு மருத்துவமனைக்குச் சென்றால் கொரோனாவுக்கு இறக்காதவர்கள் டெங்குவால் இறந்துவிடுவர்’ என நீதிமன்றம் வேதனை தெரிவித்தது. ‘ஆக்ஸிஜன் தட்டுப்பாடு உள்ளது என யாராவது கூறினால் அவர்கள் மீது தேசிய பாதுகாப்பு சட்டம் பாயும்’ என யோகி ஆதித்யநாத் தெரிவித்தார். ‘உத்தரப்பிரதேச கொரோனா நிலவரம் மோசமாக உள்ளது என செய்திகள் பரப்பப்பட்டால் அவர்கள் சொத்துகள் பறிமுதல் செய்யப்படும்’ என யோகி ஆதித்யநாத் அறிவித்தார். மரணத்தோடு போராடிக் கொண்டிருந்த தன் தாத்தாவுக்காக, ஆக்சிஜன் கேட்டு ட்விட்டரில் பதிவிட்ட இளைஞர் மீது, உத்தரப் பிரதேச காவல்துறை வழக்குப் பதிவு செய்தது. கொரோனா ஊசிக்குப் பதிலாக நாய்க்கடி ஊசி போட்ட மாநிலம் அது.**

**பிரதமர் தொகுதியான வாரணாசியிலும் ஆக்சிஜன் தட்டுப்பாடுதான் இருந்தது. வாரணாசியில் உள்ள ஒரு கிராமத்துக் குழந்தைகள் சாப்பிட எதுவும் கிடைக்காமல் புல் சாப்பிடுவதாக படத்துடன் செய்தி வெளியிட்ட ஆங்கிலப் பத்திரிக்கையாளர் மீது வழக்குப் போடப்பட்டது. இரட்டை எஞ்சின் ஆட்சி மக்களை எப்படிக் காக்கும் என்பதற்கு உத்தரப்பிரதேச உதாரணம் போதும்!**

அதிகாரத்தையும் ஆட்சியையும் கையில் வைத்திருந்த மோடி அதைப் பயன்படுத்தாமல் மக்களை கை தட்டச் சொன்னார். பாத்திரங்களைத் தட்டச் சொன்னார். வாசலில் விளக்கு ஏற்றச் சொன்னார். இருண்ட காலம் தான் தனது ஆட்சி என்பதை அவரே உணர்த்துவதாக இருந்தது இந்தச் செய்கைகள்.

**‘நன்றாகக் கை கழுவிக் கொள்ளுங்கள்’ என்றார் மோடி. மக்களைக் கை கழுவிவிட்டு!**




வேலூரில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி சார்பில் வடக்கு மாவட்ட தி.மு.க. தேர்தல் பணிமனையை கழக பொதுச் செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார். உடன் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், மாவட்டப் பொருளாளர் சி.நரசிம்மன், வேலூர் மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாநகராட்சி துணை மேயர் எம். சுனில்குமார், பகுதி செயலாளர் வன்னியராஜா மற்றும் கழக நிர்வாகிகள், கூட்டணிகட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## “புதுச்சேரிக்கு முழு மாநில அந்தஸ்து தேவை இல்லையாம்!”

### மக்களவையில் - டி.ஆர்.பாலுவுக்கு உள்துறை அமைச்சர் பதில்!

புதுடெல்லி, மார்ச் 26-

ஒன்றிய பிரதேசமாக உள்ள புதுச்சேரிக்கு முழுமையான மாநில அந்தஸ்து, ஒன்றிய அரசின் செல்வமகள் சேமிப்புத் திட்ட வட்டியை 9.1 சதவீதமாக உயர்த்துதல், நலிவடைந்து வரும் வங்கதேசத்துடன் ஆன இருதரப்பு உறவு, நிதி உதவிகளில் மேம்பாடு உள்ளிட்ட மூன்று கேள்விகளை தி.மு.க மக்களவைக்குத் தலைவரும் ஸ்ரீபெரும்புதூர் மக்களவை உறுப்பினருமான டி.ஆர். பாலு அவர்கள் எழுப்பி இருந்தார். இந்தக் கேள்விகள் அனைத்தும் நேற்று முன்தினம் (24.03.2026) பதிலளிப்புக்கு வந்தன.

ஒன்றிய உள்துறை, வெளியுறவுத் துறை மற்றும் நிதித்துறை களின் அமைச்சர்கள் இந்த வினாக்களுக்கு பதில் அளித்தனர்.

எழுத்துப் பூர்வமாக மூன்று அமைச்சர்களும் அளித்த பதில்களின் விவரங்கள் பின்வருமாறு :-

**புதுச்சேரிக்கு முழுமாநில அந்தஸ்து!**

ஒன்றியப் பகுதியாக இருந்து வரும் புதுச்சேரிக்கு முழு மாநில வழங்கப் படவேண்டும் என்ற அப்பகுதி வாழ் மக்களின் கோரிக்கையை ஒன்றிய அரசு ஏற்று அதனை நிறைவேற்ற உள்ளதா? அப்படியானால் அதன் விவரம் என்ன? கோரிக்கை ஏற்கப்பட மாட்டாது என்றால் அதற்கான காரணம் என்ன? என டி.ஆர்.பாலு தனது வினாவில் கேட்டிருந்தார்.

இதற்கு இன்று பதிலளித்த உள்துறை இணை அமைச்சர் நித்யானந்த் ராய் அவர்கள், தற்சமயம் அரசியலமைப்பு சட்டம் 239 (A) ன் கீழ் புதுச்சேரி சட்டமன்றத்துடன் கூடிய ஒன்றியப் பகுதியாக, துணைநிலை மாநிலமாக அமைக்கப் பட்டுள்ளது. அதனை திறம்பட நிர்வகிக்கவும் பொது நன்மையை வழங்கிடவும் தேவையான நிர்வாக அமைப்பு, ஆட்சித்திறன் ஆகியவற்றை தற்போதைய அரசியலமைப்பு மற்றும் சட்டம் சார்ந்த கட்டமைப்பினை தற்போதைய துணைமாநில நிலையே அளிக்கிறது, என தனது பதிலில் தெரிவித்துள்ளார். இதன்மூலமாக புதுச்சேரிக்கு முழு அளவிலான மாநில அந்தஸ்தும் அதிகாரங்களும் அவசியம் இல்லை தற்போதைய துணைமாநில அந்தஸ்தே போதுமானதாக உள்ளது என ஒன்றிய அரசு நாடாளுமன்ற த்தில் ஒளிவு மறைவு இல்லாமல் தெரிவித்துள்ளதைத்தான் உள்துறை அமைச்சரின் பதிலில் இருந்து தெளிவாகிறது.



**குறைக்கப்பட்ட செல்வமகள் சேமிப்பு திட்ட வட்டிவிகிதம் ஆரம்ப அளவுக்கு (9.1%) உயர்த்தப்படுமா?**

சுகன்யா சம்ரித்தி யோஜனா என்ற பெயரில் பத்துவயதுக்கு உட்பட்ட பெண் குழந்தைகளின் நலனை காக்க 2015 முதல் ஒரு திட்டத்தை ஒன்றிய அரசு செயல்படுத்தி வருகிறது. தொடங்கப்பட்ட போது, இந்த செல்வமகள் சேமிப்பு திட்டத்தின் கீழ் வைக்கப் பட்டுள்ள சேமிப்பின் மீது 9.1 சதவீதம் வட்டி வழங்கப் பட்டது. சென்ற பத்தாண்டுகளில் வட்டி வீதம் கடுமையாக குறைக்கப் பட்டு விட்டது. எனவே, பெண்குழந்தைகளின் எதிர்காலத்தை உறுதி செய்யும் நோக்கில் செயல்படுத்த பட்டு வரும் இந்த திட்டத்தில் வட்டிவிகிதம் பழைய படி 9.1 விழுக்காடு அளவுக்கு உயர்த்தப்படுமா என்று திரு. டி.ஆர். பாலு எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த ஒன்றிய நிதித் துறை இணை அமைச்சர் திரு. பங்கஜ் சவுத்ரி அவர்கள் வட்டி விகிதம் 2024 ஜனவரி முதல் 8.1 விழுக்காடு அளவிலேயே தொடரும் எனத் தெரிவித்துள்ளார்.

**வங்கதேசத்துக்கான நிதியுதவி, இருநாட்டு உறவில் கடும் பின்னடைவா?**

வங்கதேசத்துக்கு இந்திய 2014 முதல் தொடர்ந்து நிதி உதவிகள், இந்திய துறைமுகங்களில் வங்கதேசப் பொருட்கள் இறக்குமதிக்கு முன்னுரிமை உள்ளிட்ட ஆதரவுக்குப் பிறகும் அண்மையில் வங்கதேசத்துடனான உறவு நலிவடைந்த காரணம் என்ன, இறக்குமதி முன்னுரிமை மீண்டும் கொண்டுவரப்படுமா என்பது உள்ளிட்ட பல்வேறு வினாக்களை டி.ஆர்.பாலு அவர்கள் தனது கேள்வியில் எழுப்பினார். இதற்கு பதில் அளித்த வெளி உறவுத்துறை இணை அமைச்சர் திரு. கீர்த்தி வர்தன் சிங் அவர்கள் 2014 முதல் 650 கோடி ரூபாய் அளவுக்கு வங்கதேசத்துக்கு இந்திய அரசு கடன் மற்றும் நிதி உதவி செய்துள்ளது. இருப்பினும் 202122 ல், ரூ.219.53 கோடியாக இருந்த நிதி உதவி 202526 ல் ரூ.25.01 கோடியாக வீழ்ச்சி அடைந்துள்ளதை அமைச்சரின் பதிலில் உள்ள புள்ளி விவரம் தெரிவிக்கிறது. வங்க தேசத்தில் இருந்து ஏற்றுமதியாகும் பொருட்களுக்கு இந்தியாவின் கடல்துறைமுகங்களில் இறக்குமதிக்கு முன்னுரிமை அளிப்பது தொடர்பான கொள்கை முடிவு சம்பந்தப் பட்ட அனைத்து கூறுகளையும் கருத்தில் கொண்டு இறுதி செய்யப்படும். வங்க தேசத்துடனான உறவு அண்டை நாடு என்ற முக்கியத்துவத்தையும் நெடுங்கால ஆழமான வரலாற்று சிறப்பு மிக்க நட்பு, கலாச்சாரம் மற்றும் மொழிப் பிணைப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மேலும் பேணி வலுப்படுத்த இந்தியா ஆவன செய்யும் எனவும் அமைச்சர் தன் பதிலில் தெரிவித்தார்.

### கோயில் நிலப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட ‘திராவிட மாடல்’ அரசு குழு அமைத்தது - அதனை மறைத்து

## அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் பொய் வாக்குறுதி!

### மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. அறிக்கை!

கரூர், மார்ச் 26 -

அ.தி.மு.க. ஏற்படுத்திய கோவில் நிலப் பிரச்சினைக்கு திராவிட மாடல் அரசு தீர்வு ஏற்பட குழு அமைத்தது. ஆனால் அதனை மறைத்துவிட்டு தேர்தல் வாக்குறுதியாக அளித்த அ.தி.மு.க.வின் செயலை கரூர் மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி அம்பலப்படுத்தி உள்ளார்.

கரூர் மாவட்டக் கழக செயலாளர் வி. செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கோயில் இனாம் நில உரிமை தொடர்பான பிரச்சினைகளால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கு தீர்வுகாண ஒரு குழு அமைத்து ஆய்வு செய்யப் பட்டு பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் என்றும் அ.தி.மு.க தற்போது தேர்தல் வாக்குறுதியாக குறிப்பிட்டுள்ளது.

இதில் உண்மை நிலை என்னவெனில், மேற்கண்ட கோயில் இனாம் நிலப் பிரச்சினைகளை களைய, ஏற்கனவே கடந்த 02.02.2026 அன்று, தமிழ் நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியில், தமிழக அரசால் அரசாணை எண்.119 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையால் வெளியிடப்பட்டு, அதில் திருப்பூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகியவற்றை தலைமையிடமாகக் கொண்டு, புதியதாக இரண்டு சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்கள் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, இனாம் நிலங்களின் பத்திர பதிவுகள் உள்ளிட்ட பிரச்சினைகளை முறையாக விசாரணை மேற்கொண்டு தீர்வுகாண உத்தரவிடப்பட்டுள்ளது..



மேலும் இத்துறையின் கீழ், மேற்கண்ட அலுவலர்களுக்கு உதவியாக கீழ்காணும் அலுவலர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1. வட்டாட்சியர்
2. துணை வட்டாட்சியர்
3. முதுநிலை வருவாய் ஆய்வாளர்
4. தட்டச்சர்
5. குறுவட்ட அளவர்
6. அலுவலக உதவியாளர்

மேற்கண்ட திருப்பூர் (சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்) திருப்பூர், கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதியாகவும்,

திருச்சிராப்பள்ளி (சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்) திருச்சி, கரூர், திண்டுக்கல் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதியாகவும் செயல்படும்.

மேற்காணும் அரசாணையின்படி இரண்டு புதிய பணியிடங்கள் உருவாக்கி அலுவலர்கள் நியமனம் செய்ய உத்தரவிட்டதின் அடிப்படையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்களாக, திருச்சிராப்பள்ளி அலகிற்கு ஆர். ரமேஷ் மற்றும் திருப்பூர் அலகிற்கு திருமதி.அ.மயில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், கரூரில், கோவில் இனாம் நிலப் பிரச்சினைக்கு, கடந்த அ.தி. மு.க. ஆட்சியில், நீதிமன்றத்தில் அ.தி.மு.க. தவறான தகவல்களை சமர்ப்பித்ததால்தான், இன்று மக்கள் பல இன்னல்களுக்கு ஆளாகியுள்ளனர்.

இவ்வாறு செந்தில் பாலாஜி அதில் குறிப்பிட்டுள்ளார்.



புதுச்சேரி மாநிலம் வில்லியனூர் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி சார்பில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் தி.மு.க. மாநில அமைப்பாளர் இரா. சிவா நேற்று அத்தொகுதிக்கு உட்பட்ட முத்துப்பிள்ளைப்பாளையம் கிராமத்தில் தமது தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கினார். வாக்கு சேகரிப்பின்போது தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் உடனிருந்தனர்.